4. விதி 110–ன்கீழ் அறிக்கை

கொப்பரைத் தேங்காய்க்குக் கொள்முதல் விலை நிர்ணயம்—மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தேங்காய் உற்பத்தி அதிகரித்து, அதன் காரணமாகத் தேங்காயின் விலை குறைந்துள்ளதால், அரசு ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ், கொள்முதல் செய்யவேண்டுமென்று, தேங்காய் உற்பத்தியாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. கடந்த ஆண்டுகளில் தேங்காயின் விலை குறைந்தபொழுது, தேங்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில், மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஆதரவு விலையில், NAFED நிறுவனத்திடமிருந்து, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு வெளி வியாபாரிகள், ஒரு குவிண்டால் ரூ.3,000/- என்று கொப்பரையைக் கொள்முதல் செய்வதால், தென்னை விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. எனவே, தென்னை விவசாயிகளுடைய உணர்வை இந்த அரசு புரிந்துகொண்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு பருவ காலத்திற்கு, கொப்பரைக் கொள்முதல் விலையைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,620/- என மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. இந்த ஆண்டிலும், ஏற்கெனவே நடைமுறையிலுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி, குவிண்டால் ரூ.3,620/- விலையில் பட்டுக்கோட்டை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் மற்றும் தாராபுரம் ஆகிய மையங்களில் கொப்பரையைக் கொள்முதல் செய்ய, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு அனுமதி வழங்க, அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தென்னை விவசாயிகளுக்கு, குவிண்டால் ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.620/- கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.